தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455.

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
C. N. அண்ணாதுரை M. A.,

"மாந்தரிற் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரே குலமாய் வாழ்வது சரியா?!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1 | காஞ்சிபுரம் 5—7—42 சித்திரபானு—ஆனி 21—ஞாயிறு | இதழ் 18

# நவீன விக்ரமாதித்தன்

பரதன்

நவீன விக்ரமாதித்த நாடகம் இது-N. S. கிருஷ்ணன் நடித்த சினிமாப் படமல்ல! ஒரு அரசியல் நாடகம். பழய விக்ரமாதித்தன்-பேசாமடந்தையைப் பேசவைத்தவன், காடாறுமாதம் நாடாறுமாதமிருந்த காவலன், கூடுவிட்டுக் கூடுபாயக் கற்றவன் என்று கூறுவர்களே, அந்த விக்ரமாதித்தன், நாடாறுமாதமானதும், வேதாளத்தைக் கூப்பிட்டு "அகோவாராய் வேதாளமே! இன்று முதல் நமக்குக் காடாறுமாத காலம் தொடங்குவதால், இன்று நாம் புறப்படுவோம் தயாராகு" என்று கூறிவிட்டு, மதியூக மந்திரி பட்டியை அழைத்து, "வாரும் மக்திரி பட்டியே! நீரும் நானும் இன்று முதல் நாடாறு நீங்கப்பெற்றோமாகையால் காடாறு துவக்குவோம்" என்று கூறி, மாகாளியைக் கும்பிட்டுவிட்டு, மந்திரவாளெடுத்துக்கொண்டு மாறுவேடம் பூண்டு, காடு மலை வனம் வனாந்திரங்களைக் கடந்துசெல்வது வாடிக்கையென்று கற்பனைக் கதையிலே காணப்படும். ஒவ்வோர் தடவை விக்கிரமாதித்தன் காடேகிப் பின்னர் நாடு திரும்பும்போதும் எதாவது ஒரு "பிரைஸ்" விழாமலிருக்காது! எவளாவதொரு நாயகி கிடைப்பாள்!

நவீன விக்கிரமாதித்தரின் வாசஸ்தலம், உஜ்ஜினி அல்ல, வார்தா! அவரும் நாடாறுமாதம் காடாறுமாதம் என்பதுபோல், சிருங்கார ஆஸ்ரமத்திலே சில காலமும், சிறையிலே சிலகாலமும் சென்றிருப்பதே வாடிக்கை. இந்த நவீன விக்கிரமாதித்தரும், வடநாட்டு முதலாளிமார்தரும் பணமெனும் வேதாளத்தை உதவிக்கு அழைத்துக்கொண்டு, பட்டியாம் சம்பந்தி ஆச்சாரியாரை உடனழைத்துக்கொண்டு சிறைபுகுந்து, சிலகாலம் தங்குவார். வந்ததும், தேர்தலிலே பரிசு கிடைக்கும். இந்த நவீன அரசியல் விக்ரமாதித்தர் நிலைமை இன்றுசற்று பரிதாபமாகிவிட்டது. "காடாறு மாதகாலம் பிறந்துவிட்டது. பட்டி! புறப்படு காடேகுவோம்!" என்று காந்தியார், ஆச்சாரியாரை அழைக்க, பார்ப்பனப் பட்டியார், "அதுமுடியவே முடியாது! காடுவரும் வேலை இனி எனக்குவேண்டாம்" என்று கூறிவிட்டார். பட்டியில்லா விக்ரமாதித்தர், விரசத்தைக் கட்டிக்கொண்டு விம்முகிறார். இதுகாறும் நாம் கூப்பிட்டதும் நமது பேச்சைத்தட்டாது இஷ்டத்துடன், நம்பின் தொடர்ந்து வந்த பட்டி இதுபோது, மறுப்பதன் காரணம் என்ன, மட்டித்தனமா துட்டத்தனமா, காலக்கூறு, என்றெல்லாம் நவீன விக்கிரமாதித்தன், எண்ணி ஏங்கிக்கிடந்த காலையில், ஆஸ்ரமவாசி ஒருவர் ஓடோடி வந்து "கேளும் என் ஐயனே! நாங்கள் கண்ட மெய்யனே! ஆச்சாரியார், பம்பாய் க்ஷேத்திரத்திலே, மலைமீது இருக்கும் ஜனாப் ஜின்னாவைத் தரிசித்து நெடுநேரம் அர்ச்சித்துவிட்டு வந்தாராம்" என்றுரைக்கக் கேட்டு, நவீன விக்கிரமாதித்தர், தரையிலே கடகடவெனப் புரண்டு தலையிலே படபடவென்று அறைந்துகொண்டு, "ஐயகோ! மோசம் போனேனே! இந்த முப்புரி நூலோன்பேச்சைக் கேட்டுக் கொண்டு இதுவரை ஜனாப் ஜின்னாவையும் பகைத்துக் கொண்டேனே! இன்று எனக்குப் பட்டியாக இருந்தவர், என்னைத் தட்டுக்கெட்டுத் தடுமாற விட்டுவிட்டு, வேறு இடம் சென்று விட்டாரே. இனி நான் என்ன செய்வேன். எனது நாடாறு காடாறு ஆகிய எதுவும் நடக்காதே, நடப்பினும் நாட்டாருக்கு நாட்டம் விழாதே, நாட்டம் வீழினும் பத்திரிகைகளின் கூட்டு கிடைக்காதே" என்றுகூறிக் கோவெனக்கதறி, "ஆஹா! பட்டி! இப்படியா வதைப்பது என் ஆசையை வெட்டி!" என்று அழுதுகொண்டிருக்க, நேருவும் பிறரும், "நாம்எவ்வளவுதான் பூஜை செய்து பால்பழம் படைத்து பக்திசெய்தாலும், வார்தா விக்ரமருக்கு மாம்பல மந்திரியார்மீது தானே மனம் செல்கிறது. நாமென்ன மதியூகமற்ற மண்டுகளா? நிதிதிரட்டவோ, சதிகூறவோ, இத்தகி நமக்குச் சக்தி இல்லையா?" என்று கூறிச் சஞ்சலத்தோடு நிற்கின்றனர்! விக்கிரமாதித்தரின் விரசம், வார்தாவிலே இருக்கும் வேளையில் பம்பாய் நகரிலே, பய பக்தி சிரத்தையோடு, பட்டி, மூன்றும் முறையாக ஜனாப் ஜின்னாவைப் பேட்டிக்கண்டு பேசிக் கொண்டிருந்தார்.

ஆச்சாரியார்:— யாரோ ஒரேஒரு காலிப்பயல் வேண்டுமென்றே அதை வீசினான்.

ஜின்னா— வீசினதைக் கேட்டு நான் ஆச்சரியப்படவில்லை ஆச்சாரியாரே! காங்கிரஸ்காரர்களுக்கு இது நல்ல பழக்கம். உங்களுக்குத் தெரியாதா அந்த விஷயம். அதுவல்ல என் ஆச்சரியத்துக்குக் காரணம். வீசினவனுக்கு, கேவலம் தார் தானா கிடைத்தது!

ஆ:— பாருங்கோ ஜின்னுஜீ! தார் எடுத்து அடித்தான்! கேவலமான புத்திக்காரன் என்று தெரியவில்லேயோ!

ஜி:— ஆமாம்! தார் கண்களிலே பட்டதோ? முகமெல்லாம் தார் பட்டிருந்தால் மிக்க அசங்கியமாக இருந்திருக்குமே

ஆ:— அவ்வளவாக இல்லே! முகத்தில் கொஞ்சம் பட்டது. சட்டை கெட்டுவிட்டது; அவ்வளவு தான்!

ஜி:— பெயர் எவ்வளவு கெட்டுவிட்டிருக்கும், அதைப் பாருங்கள்!

ஆ:— பெயர்கெட்டால் என்ன? தங்களின் ஆதரவு இருந்தால், மீட்டுக்கொள்ள நெடுநேரம் ஆகுமோ! கூட்ட நிகழ்ச்சியைப் பற்றிப் பத்திரிகையிலே பார்த்துவிட்டுத் தாங்கள் என்னைப்பற்றித் தவருக எண்ணிவிடப் போகிறீர்கள் என்று பயந்துதான், நானே வந்தேன், விஷயத்தைக்கூற. ஒரே ஒருபயல் செய்த விஷமம்! கூட்டத்திலே வேறு கலகம் கிடையாது. பாகிஸ்தானுக்கு ஆதரவு பலமாக இருக்கிறது.

ஜி:— எல்லாம் சரிதான்! காந்தி ஏதோ ஒரு புதிய போர் ஆரம்பிக்கிருராமே?

ஆ:— போரும் கோறும்! அது நடவாதகாரியம்.

ஜி:— அவருக்கு விஷயத்தை எடுத்துச் சொல்லும். புதுப்போர் ஆரம்பமாளுல், பிறகு, லீக், சும்மா இராது. சமரசம் பிறகு குதிரைக் கொம்புதான்.

ஆ:— நேரே வார்தாபோய், இரண்டு நாள் தங்கியாவது காந்திக்குக் கூறுகிறேன். பெரும்பாலும் என் பேச்சைக் கேட்பார் என்றுதான் நம்புகிறேன். தங்கள் ஆசீர்வாதமிருந்தால்...............

ஜி:— ஆண்டவனிடம் கேளுங்கள், ஆசீர்வாதம்! ஆச்சாரியாரே, நீர் இவ்வளவு தெளிவு பெறுவீர் என்று நான் கருதினதில்லே. காந்தியப்போதை உமக்கு மிக அதிகமாக இருந்ததே எப்படி மாறிவிட்டது?

ஆ:— காந்தீயப்போதை எனக்கு எப்போதுமே கிடையாது. அந்தப் போதையை நான் பிறருக்குத் தந்திருக்கிறேன்; நான் பருகினதில்லே.

ஜி:— நல்லகாரியம் செய்தீர். "சாயா" சாப்பிடுகிறீர்களா? கொண்டுவரச் சொல்கிறேன்.

ஆ:— எதற்குச் சிரமம்? வேண்டாம்!

ஜி:— ஏன்? இன்னமும் அந்த ஆரியக் கருத்து போகவில்லேயோ...............!

ஆ:— அப்படி எண்ணப்படாது! எனக்கு ஆஸ்த்மாவுண்டு, டீ, நல்லதல்ல, உடம்புக்கு ஒத்துவாராது.

ஜி:— சரி. அப்போது, காந்தியாரைப் பாரும். காரியம் கைகூடினுல் திரும்ப இங்கே வாரும்.

ஆ:— நான் போய்வருகிறேன். நமஸ்த்தே!

ஜி:— சலாம், போய் வாருங்கள்!

* * * *

ஆச்சாரியாரின் பம்பாய்ப் பயணம், ஜனுப் ஜின்னு தரிசனம், பொதுக்கூட்டத்திலே எவனே ஓர் போக்கிரி அவர்மீது தார்வீசின சம்பவம், பின்னர், ஆச்சாரியார் மூன்றும் முறையாக ஜனுப் ஜின்னுவைப் பேட்டி கண்டுபேசியது, பிறகு வார்தாசென்று காந்தியாரிடம் பேசியது ஆகிய இந்தச் செய்திகளே, வம்பன், விக்கிரமாதித்த ராஜா கதை ரூபமாக்கி என்னிடம் தந்தான். "இதை ஏனப்பா, இப்படி எழுதுகிருய் விஷயத்தை மட்டும் கூறினுல் போதாதோ?" என்று நான் அவனுக்குப் புத்தி புகட்டினேன். அவன் "போதும் பாதா! உன்னுடைய நீதியும் நியாயமும். இத்தகைய சம்பவம், நமது கட்சிக்கு மட்டும் ஏற்பட்டுவிட்டிருந்தால், அடடா! இந்தக் காங்கிரசார் ஏடுகள் எவ்வளவு ஆடி இருக்கும். எவனே ஒரு காலி, காங்கிரஸ் காரரிடம் கூலி வாங்கிக்கொண்டு நமது கூட்டத்திலே கல் வீசியிருப்பான். உடனே, காங்கிரஸ் ஏடுகள், **"ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டத்திலே குழப்பம். பொதுமக்களின் ஆத்திரம். ஈ.வெ ராவைக் கல்லாலடித்தனர்"** என்றுகொட்டை எழுத்திலே போட்டு, கோணற்சேட்டையைக் காட்டுவரே, அதனை மறந்தாயோ! இந்தப் பூணாரம் பூண்ட புதுமைதனைக் கண்டதில்லேயோ! தார் அபிஷேகம் இந்தத்தரணியிலே எந்தத்தலேவருக்குத்தான் நடந்தது. கூறுபார்ப்போம்" என்று கோபத்துடன் என்னிடம் கூறினுன். உண்மைதான், நமது கட்சிக் கூட்டங்களிலே சிறு கலவரத்தைக் காலிகள் செய்தால், உடனே காங்கிரஸ் ஏடுகள், "ஜஸ்டிஸ் கட்சியினரின் கூட்டத்திலே, பேசுவதைக் கேட்டு மக்கள் கொதித்து, ஆத்திரமடைந்து, கற்களே வீசினர்" என்றன்றோ எழுதுவது வழக்கம்! காலிகளுக்குத் தூபமிட்டு, நமது கூட்டத்திலே குழப்பம் விளேவித்து வந்ததன் பலன், இன்று ஆச்சாரியாரின் கூட்டத்திலே கல்லும் மண்ணும், செருப்பும் பிறவும் வீசப்பட்டதோடு, பம்பாயிலே தார்பூசும் காட்சியும் நடந்தேறியது. காலம், பாருங்கள், எவ்வளவு நிர்த்தாட்சணியமாக அவர்கள்மீது வஞ்சந்தீர்த்துக் கொண்டது. இத்தனைக்கும் ஆச்சாரியார் அப்படி யொன்றும், அக்ரமமாகப் பேசிவிடவில்லே. காங்கிரசைத் தாக்கவுமில்லே. இன்னமும் காங்கிரஸ்காரராக இருந்து கொண்டே, காங்கிரஸ்காரர் கூட்டத்திலே, காங்கிரஸ் இன்ன காரியத்தை இன்னவிதமாக நடத்தவேண்டும் என்று கூறுகிருர். இதற்கு இவ்வளவு இடி இவருக்கு, பாவம்! மூன்ருண்டுகளுக்கு முன்பு, பம்பாய் தாதர் ரயில்வே நிலேயத்திலே, ஓர் அற்புதக்காட்சி நடந்தது. ஆச்சாரியாரோ, அவரதுசம்பந்தியாரோ, நினைத்தாலே நடுங்குவர் அத்தகைய காட்சியை நடத்திக் காட்ட வேண்டுமென்ருல்.

திடீரென ஓர் நாள், சென்னே ரயில்வே நிலேயத்திலே, சில வடநாட்டார்கள், "தமிழ் ஒழிக!" என்று கூவிக்கொண்டு, வண்டியைவிட்டுக் கீழே இறங்கினுல், என்ன நடக்கும். "தமிழ் ஒழிக!" என்றுகூவிய தொண்டையிலிருந்து பிறகு வேறு வார்த்தை கிளம்பியிருக்க முடியுமா! தமிழரின் செவியில், இரும்பைக் காய்ச்சி ஊற்றுவது போலத்தானே அச்சொல் இருக்கும். சகித்திருக்கமுடியுமா! ஆனுல் இதைக்கேளுங்கள்!!

இந்தி ஒழிக! இந்தி ஒழிக! என்ற முழக்கத்துடன், தமிழர் தலேவர் பெரியார் ஈ. வெ. ராவை வரவேற்கக் கூடிய நூற்றுக்கணக்கான தமிழர்கள், பம்பாயிலே பாடுபட்டு வாழ்ந்துவரும் நமது தோழர்கள், சொந்த நாட்டிலே நஞ்சையும் புஞ்சையும், முத்தும் மணியும், தங்கமும் பிறவும் இருந்தும், வாழுமார்க்கம் அமையாதகாரணத்தால், தாயகத்தைவிட்டு வேற்றூர் சென்று வாடும் தோழர்கள் இந்தி ஒழிக என்று எக்காளமிட்டு நின்றனர், மூன்ருண்டுகளுக்குமுன்னர், பம்பாயில், தாதர் ரயில்வேநிலேயத்திலே. வடநாட்டவர் வாய்பிளந்து நின்றனர்! வண்டியிலே வந்த பார்ப்பனர்கள் மிரண்டோடினர். இந்தி எதிர்ப்புப்படை இங்கும் வந்ததோ என்று அஞ்சினர். இது அன்று. பிறகு, தாராவியில்

(11ம் பக்கம் பார்க்க)

# அவனை மயக்கியவள்!

அருணன்

உலகத்தில், தேர்ந்த அயோக்கியர்களில் பலர் வெளிக்கு மிகமிக நல்லவர்களைப்போலக் காணப்படுகிறார்கள். ஆனால், எல்லோரும் அவர்களை நல்லவர்களென்று எண்ணி ஏமாந்துவிடுவதில்லை.

ஆனந்தராசனைப்பற்றிச் சென்னையிலும் வெளியூரிலும், உள்ள பலருக்கு நன்றாகத்தெரியும். நீங்களும் அவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். அநேகர் அவனைப் பெரிய தேசாபிமானி என்றும், பரோபகாரி என்றும் சொல்லுகிறார்கள். உண்மையில் அவன் தேசாபிமானி, பரோபகாரி என்பதற்கேற்றபடி சிறந்த காரியங்கள் ஒன்றும் செய்துவிடவில்லை. ஆனாலும், எப்படியோ, அவனுக்குத் தேசாபிமானி, பரோபகாரி என்னும் பெயர்கள் கிடைத்துவிட்டன. எல்லாப் பத்திரிகைக்காரர்களும் அவனுக்கு வேண்டியவர்கள், சமயம் வரும்போதெல்லாம் அந்தப் பத்திரிகைகளுக்கு அவன் உதவிசெய்வான். எந்தச்சமயத்தில் தேசத்தில் எந்தக் கட்சி அதிகாரத்தில் இருக்கிறதோ அந்தக் கட்சியோடு அவன் சேர்ந்துகொண்டு தாளம் தட்டுவான். அந்தக்கட்சிப் பத்திரிகைகளுக்குப் பணத்தைவாரி வீசுவான். சிறந்த பக்திமான் என்று தன்னைப் பலர் நினைக்கவேண்டுமென்று எண்ணித்தன் செல்வத்தைப் பலரும் அறியும்படி அவன் அடிக்கடிப் பலகோயில் குளங்களுக்குச் சென்று வருவான், அப்படி அவன் செல்லும்பொழுதும், திரும்பிவரும்பொழுதும் அவனிடத்தில் கூலிவாங்கிக்கொண்ட பத்திரிகைகள் அவன் பெரிய பக்திமான் என்று பிரமாதமாக விளம்பரப்படுத்தும். உண்மையில், அவன் சிறந்த பக்திமானும்; ஒழுக்கம் உடையவனுமல்லன். ஆனாலும், அவனைப் பலர் பெரிய மனிதனென்றே எண்ணிவந்தார்கள். இப்படிப்பட்ட ஆஷாடபூதிகள்பலர் சென்னையில் இருந்து வருகிறார்கள், பொதுஜனங்கள் இப்படிப்பட்டவர்களின் உண்மை நிலையைக்கண்டறியும் காலம் என்றுவருமோ, அன்றுதான் நமது நாட்டுக்கு நன்மைவரக்கூடும்.

ஆனந்தராசன் இரசியத்தில் குடிப்பான்; ஆனால் குடிப்பது பாவமென்று பிரசங்கம்செய்வான். விபசாரம் தோஷமானதென்று சொல்லுவான்; ஆனால்அவன் செய்யும் விபசாரத்திற்குத் கணக்கே கிடையாது. ஆனந்தராசன் உண்மையில் ஒருபெரிய பணக்காரன். சென்னையிலேயே அவன் ஒரு பெரிய பணக்காரன். ஊசிவிற்பது முதலாக மோட்டார் விற்பது வரையில் உள்ள பலவிதவியாபாரங்களை அவன்செய்துவருகிறான் அவன் வியாபாரமெல்லாம் வடநாட்டுப் பொருள்களை நம்நாட்டில் கொண்டுவந்து நம்மவர்கள தலையில்கட்டி நமது பணத்தை வடநாட்டுக்கு அனுப்புவதேயாகும். ஆனாலும், இவன் தேசாபிமானி என்றுதான் அழைக்கப்படுகிறான். பொதுஜனங்கள் ஒன்றும் தெரியாதவர்களாகவே இருப்பதுதான் இதற்குக் காரணம். அவன் செய்கிற எல்லா வியாபாரங்களிலுங், மோசம் கலவாமல் இருப்பதே இல்லை. அந்தரங்கத்தில் அவன் மிகவும் கெட்டவன் என்பது பலருக்கும் தெரியாது; புத்திசாலிகளான சிலருக்கு மட்டும் தெரியும்.

சென்னை மயிலாப்பூரில் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்துக்கொண்டு பிரபலபணக்காரர் ஒருவர் அதில் வசித்துவந்தார். அவர் யாரோடும் அதிகமாகப் பழகுவதில்லை. அவர்பெயர் அன்பானந்தர் என்பது. அவரோடு அவர் மகள் ஆனந்தவல்லி என்பவள் வசித்துவந்தாள். ஆனந்தவல்லி அழகிற்சிறந்த அழகியாய் விளங்கினாள். நல்ல அழகான சித்திரம் வேண்டுமென்று நினைக்கிற சித்திரக்காரர்கள் அவளை மாதிரிக்காக வைத்துக்கொண்டு சித்திரம் எழுதுவார்களானால் அவர்கள் எழுதிமுடித்த அந்தப்பெண் உருவ ப்படத்திற்கு முதல் வெகுமதி எந்த இடத்திலும் கிடைத்துவிடகூடுமென்பது உண்மை. அவள் வயது பதினெட்டு இருக்கலாம். அவள் ஆங்கிலத்தில் 'மெட்ரிக்குலேஷன்' வரையில் படித்திருந்தாள். தமிழிலும் அவளுக்கு நல்ல அறிவுண்டு. தமிழில் அவள் எந்த விஷயத்தைப் பற்றியும் சுமாராகப் பாட்டுப் பாடவும பழகி இருந்தாள். சிலபடித்த பெண்கள், பெண்களுக்கு இருக்க வேண்டிய அழகை இழந்து, அழகற்று, விளங்குகிறார்கள். ஆனால். ஆனந்தவல்லி படித்தவளாயிருந்தும் பளபளவென்னும் தேகப் பொலிவோடும், மதர்த்து வளர்ந்த அங்க அவயவங்களோடும் விளங்கினாள். இவளுக்குச் சமையல் செய்வதற்காக இவர்களோடு ஒரே ஒரு வேலைக்காரிமட்டும் இருந்தாள். இவளைத் தவிர இவர்களோடு இவர்கள் வீட்டில் எப்பொழுதும் இருப்பவர்கள் வேறொருவரும் இல்லை, தோட்டவேலைக்காரனும்,. மோட்டார்வண்டி ஓட்டியும் அவரவர்கள் வேலைதீர்ந்தவுடன் அவரவர்கள் வீட்டிற்குப் போய் விடுவார்கள்.

அன்பானந்தரும் ஆனந்தவல்லியும் அடிக்கடிச் சென்னைக் கடற்கரைக்கு உலாவச்செல்லுவது வழக்கம். அவர்கள் கடற்கரையில் ஒரே இடத்தில் உட்கார்ந்திராமல் அரைமைல் தூரம்வரையில் தினந்தோறும் சென்று உலவிவருவது வழக்கம். அப்போதெல்லாம் ஆனந்தவல்லியைக் காணும் வாலிபர்கள், அவள் அழகில் ஈடுபட்டு மனங்கலங்குவார்கள். அவளைத்தரிசிப்பதற்காகவே அநேகம் வாலிபர்கள் அவள்தன் தந்தையோடு கடற்கரைக்கு வருகிறசமயத்தில் தாங்களும் அங்கு வருவது வழக்கம். ஆனந்தவல்லியைக் காணும் வாலிபர்கள் மட்டுமல்லாமல் நடுத்தர வயதுடையவர்களும் கூடச்சிறிது மயங்குவது வழக்கமாய்விட்டது.

ஆனந்தவல்லியைப் பார்த்து மயங்கியவர்களில் நான் இந்தக் கதையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஆனந்தராசனும் ஒருவனாவன்! ஒருநாள் ஆனந்தவல்லி தன் தந்தையோடு மோட்டார்வண்டியில் வந்து இறங்கியபோது ஆனந்தராசனும் அங்கு மோட்டார் வண்டியில்வந்து இறங்கினான். அப்போது அவன் ஆனந்தவல்லியைப் பார்த்தான், அவளும் அவனைப் பார்த்தாள். இருவரும் ஒருவரையொருவர் விரும்புவதாக ஒவ்வொருவரும் தமக்குள் எண்ணிக் கொண்டனர். அடுத்த விநாடியில் ஆனந்தவல்லி ஆனந்தராசனை இரண்டொருமுறை திரும்பித்திரும்பிப் பார்த்துகொண்டே தன் தந்தையோடு உலாவச்சென்றாள். ஆனந்தராசனும் அவர்களுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் தானும் உலாவச் செல்லுகிறவனைப்போல போக்குக் காட்டிச் சென்று கொண்டிருந்தான்,

இரண்டுவாரங்கள் சென்றன. இதற்குள் ஆனந்தராசன் ஆனந்தவல்லியின் தகப்பனாராகிய அன்பானந்தரைத் தனக்குப் பழக்க முள்ளவராகச் செய்து கொண்டான். அதனால், ஆனந்தவல்லியோடு அவனுக்குப் பழகவும் பேசவுஞ் சந்தர்ப்பம் அடிக்கடி கிடைத்தது. வரவர ஆனந்தராசனோடு தன் தகப்பனாருக்கு முன்னாலேயே சர்வ சாதாரணமாகப் பேசத்தலைப்பட்டாள். ஆனந்தராசனுக்கு முப்பத்தைந்து வயது இருக்கலாம். அவனும் அழகுடையவனாகவே காணப்பட்டான். ஆனாலும், இயற்கையழகைக் காட்டிலும் செயற்கையழகுதான் அவனிடம் அதிகமாயிருந்தது. ஆனந்தவல்லியோ செயற்கையழகை காட்டிலும் இயற்கையழகை அதிகம் உடையவளாயிருந்தாள்.

சிலசமயங்களில் உலவுகையில் ஆனந்தராசனும் ஆனந்தவல்லியும் ஒன்றாகச் செல்லுவார்கள். அப்பொழுது அன்பானந்தர் அவர்களுக்கு முன்னாலாவது பின்னாலாவது சிறிது தூரத்தில் செல்லுவார். ஆனந்தராசனுக்கு ஆனந்தவல்லியோடு பழகப்பழக அவளை அடையவேண்டும் என்னும் எண்ணம் மனதில் மிக மிக வேகமாகவளர்ந்தது. நெருப்பின் அருகில்மெழுகு எப்படி உருகாமல் இருக்கமுடியும்! ஆகவே, ஆனந்தவல்லி, என்னும் நெருப்பினிடம் நெருங்க நெருங்க ஆனந்தராசன் என்னும் மெழுகானது உருகி உருகிக் கசியத்தலைப்பட்டது.

ஓர் நாள் ஆனந்தவல்லி தன் பங்களாவில் மின்சார விசிறியின் கீழ் உட்கார்ந்த வண்ணம் "எப்படிக் காதலிப்பது?" என்னும் ஓர் இங்கிலீஷ் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் தபால்காரன் ஒருவன் அங்குவந்து அவளிடம் ஒருகடிதத்தைக் கொடுத்துச் சென்றான். அப்பொழுது அவள், காதலுக்கு சீக்கிரத்தில் இடங்கொடுத்துவிடக் கூடாது என்னும் பகுதியைத் தன்கையிலிருந்த புத்தகத்தில் படித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது தபால்காரன் தன்கையில் கொண்டுவந்து கொடுத்த கடிதத்தை அவள், கையிலிருந்த புத்தகத்தை மேசையின் மீது வைத்துவிட்டு, பிரித்துப் பார்த்தாள். அந்தக் கடிதத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

சென்னை.
4—2—**.

"காதலி"

உன்னை நான் இவ்விதம் அழைப்பதற்கு நீ என்னைக் கோபியாமல் சம்மதிப்பாய் என்றே நான் நம்புகிறேன். என்மனம் உன்னை விரும்புவதைப் போலவே உன் மனமும் என்னை விரும்புகிறதென்பது எனக்கு தெரியும். அதனால்தான் நான் இக்கடிதத்தை உனக்கு எழுதினேன். நாமிருவரும் ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுதெல்லாம், என்னென்னவோ வீணானபேச்சுக்களையெல்லாம் பேசிப் பொழுதைப்போக்குகிறோம் நாமோ ஒருவரையொருவர் விரும்புகிறோம், ஆனால் அதைப்பற்றி ஒருவரோடு ஒருவர் வாய்திறந்துபேசவே இல்லை. இனியாவது நாமிருவரும் இன்பத்திற்குரிய நமது பிரியத்தைப்பற்றி ஒருவரோடொருவர் பேசி மகிழ வேண்டும். அடுத்தமுறை நாம் ஒருவரையொருவர் சந்திக்கும்போது இப்படி நாம் பேசி மகிழ்வோமென்று நான் நம்புகிறேன்.

இப்படிக்கு
உன்பிரியத்துக்குரிய,
ஆனந்தராசன்.

இவ்வாறு எழுதப்பட்டிருந்த விஷயங்களைப் படித்தவுடன் ஆனந்தவல்லி சற்றுநேரம் எதைப்பற்றியோ சிந்தித்தாள். அப்போது அவள் தந்தையாராகிய அன்பானந்தர் அங்குவந்தார்.

மறுநாள் காலையில் ஆனந்தராசன், தன்வீட்டில் மேசையினருகில் உட்கார்ந்துகொண்டு ஆனந்தவல்லியின் மீது சென்றமனதோடு அரைகுறையாக மேசையின் மீதிருந்த கணக்குப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது தபால்காரன் கொண்டுவந்து கொடுத்ததாகச்சொல்லி ஒரு வேலைக்காரன் அவனிடம் ஒருகடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றான். ஆனந்தராசன் அதைப்பிரித்துப் பார்த்தான். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

சென்னை
4—12—**

"அன்பரே"

நீங்கள் என்னை இஷ்டம்போல் உங்கள் காதலியாகக் கொள்ளலாம். ஆகவே நீங்கள் என்னை எத்தனை முறைவேண்டுமானாலும், 'காதலி, காதலி' என்று அழைக்கலாம். பெண்களுக்கு இயற்கையாய் இருக்கக் கூடிய நாணம் என்பது என்னிடமும் இருக்கக்கூடுமல்லவா? அதனால்தான் எனக்கு உங்கள்மீது அளவு கடந்த பிரியம் ஏற்பட்டிருந்தும், அதைநான் முதலில் உங்களிடம் சொல்லிக்கொள்ள முடியாதவளாயிருந்தேன். இனிநாம் சந்திக்கும்பொழுது முதலில் நீங்கள் விஷயத்தைத் தொடங்கினால் பிறகுநான் அதைத் தொடர்ந்து பேச விரும்புகிறேன். என்தந்தை இன்றிரவு தஞ்சாவூருக்குச் செல்லுகிறார். ஆகவே இன்று மாலை நான் கடற்கரைக்கு வரமாட்டேன். அவரும் வரமாட்டார். 'சிலோன் போட்மெயி'லில் அவர் இன்றிரவு தஞ்சாவூருக்குச் செல்லுகிறார். நான் அவரோடு எழும்பூர் ஸ்டேஷன் வரையில் சென்று இரயில் போனபிறகு வீட்டிற்கு திரும்புவேன். நீங்களும் தற்செயலாக வந்தவரைப்போல் ஸ்டேஷனுக்குவந்து என் தந்தையைக் காணுங்கள். அவர்சென்ற பிறகு நாமிருவரும் நமது வீடுகளுக்குத்குத் திரும்புவோம். மற்ற விஷயங்களைப் பற்றி நாம் ஸ்டேஷனில் சந்திக்கும்போது பேசிக்கொள்ளலாம்.

இப்படிக்கு,
தங்கள் காதலி
ஆனந்தவல்லி.

இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் ஆனந்தராசன் அளவில்லாத ஆனந்தம் அடைந்தான்.

இரவு எட்டுமணிக்கு எழும்பூர் இரயில்வே ஸ்டேஷனில் ஆனந்தராசன் அன்பானந்தரையும், ஆனந்தவல்லியையுல் சந்தித்தான். வண்டி ஓடி மறைந்தவுடன் ஆனந்தராசனும், ஆனந்தவல்லியும் ஒருவரை யொருவர் பார்த்தனர். ஆனந்தவல்லி வெட்கத்தினால் தலை குனிந்தாள். பிறகு அவள் 'வாருங்கள் போகலாம்' என்று வெட்கத்தோடு சொல்லி ஆனந்தராசனை அழைத்துக்கொண்டு ஸ்டேஷனுக்கு வெளில்வந்தாள். அங்கு ஆனந்தவல்லியின்மோட்டார் வண்டியும் ஆனந்தராசனுடைய மோட்டார் வண்டியும் அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தன.

ஆனந்தவல்லி தன் மோட்டார் வண்டி ஓட்டிக்கு ஆனந்தராசனைக்காட்டி, 'நான் இவரோடு கடற் கரைக்குச் சென்று வருகிறேன். நீ நம்முடைய வண்டியை நமது வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு உன்னுடைய வீட்டிற்குப் போகலாம், 'என்று சொன்னாள். உடனே அவள் மோட்டார் வண்டி ஓட்டி அவள் வண்டியை மயிலாப்பூரை நோக்கிச் செலுத்திக் கொண்டு போனான்.

அவன்சென்ற பிறகு ஆனந்தவல்லி, ஆனந்தராசனோடு அவனுடைய மோட்டார் வண்டியில் ஏறிக் கொண்டு திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் சென்றாள். அன்றைக்குப் !பௌர்ணமியாதலால் ஆகாய வெளியில் முழு நிலவு பால் போல் காய்ந்து கொண்டிருந்தது. அதனால், ஆண்களும், பெண்களும், காற்றுக்காக வந்திருந்தவர்கள், அடியோடு கடற்கரையை விட்டுத்தங்கள் வீடுகளுக்குப் போய் விடவில்லை.

வண்டியை விட்டு இறங்கியவுடன் ஆனந்தராசனும் ஆனந்தவல்லியும் காதலர் நடைபாதையில் உலாவச் சென்றனர். அப்பொழுது அவர்கள் தாங்கள் ஒருவரை யொருவர் விரும்புவதை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர். இரவு ஒன்பதரை மணிக்கு ஆனந்தராசன் ஆனந்தவல்லியை அவள் பங்களாவில் கொண்டு போய் விட்டு விட்டுத் தான் தன் பங்களாவுக்குப் போய்ச்சேர்ந்தான். மறுநாட்காலையில் நீல நிற உறையோடு கூடிய கடிதம் ஒன்றைக்கொண்டுவந்து தபாற்காரன் ஆனந்தராசனிடத்தில் கொடுத்துவிட்டுப் போனான். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது

(9-ம் பக்கம் பார்க்க)

# ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்!

வீனஸ்

முல்லையும் ரோஜாவும் விரித்த, மணங்கமழும் மலரணைமீது சாய்ந்துகொண்டு, மதுக்கோப்பையுடன் ஓர் மாதும், மதுரக்கீதம் பாட மற்றோர் மாதும், மேலே சாய்ந்துகொண்டு தன் மிருதுவான கரத்தால் அவன் அடிவருட மற்றோர் அணங்கும் இருக்க கோலாகலமாக இருந்த குமரன் முன்வந்து நின்ற வேலைபாட்கள், "ஐய! நின் அருமை மனைவி, அக்கினிப்பிழம்பென நிற்கின்றாள். ஆருந்துயர் என்னைத் துளைக்கிறதே என்று அலறுகிறாள் என்றுகூற "அறிவோம் அதனை நாம்! அவள் விசாரம், அறியாமையால் வருவது. நாம் செய்பவல்லதென்ன உளது. என்னை மணந்தாள், என் நிலை உணர்ந்து. மணவினை என்ற சம்பிரதாயத்தைக் காக்க நான் அவளுக்குமாலையிட்டேன். ஆனந்தம்பெற இதோ என் ஆசைநாயகியரை அடைந்தேன். இதிலென்ன குற்றம், இவள் ஏன் ஏங்க வேண்டும்." என்றுரைத்துவிட்டு" "ஏடி! கருங்குழலி! கற்கண்டு மொழியாளே! மதுக் கிண்ணத்தை முத்தமிட்டு எனக்குத்தா" என்றுரைத்துவிட்டுச் சிரிக்க, வேலையாள், "மற்றுமொன்றுளது ஐயனே! உமது தங்கை பாஸ்டினா அம்மையாரைப் பற்றியும் ஊரார் ஏதேதோ கூறுகின்றனர். சக்கரவர்த்தியும் சித்தம் சோர்ந்து கிடக்கிறாராம். பாஸ்டினாவின் செயல்கள் பாதகம் மிக்கன என்று பாமரர் பேசிடக் கேட்டு பார்த்திபன் பதறுகிறாராம். இத்தகைய இழுக்கு எனக்குற்றதே என்று ஏங்குகிறாராம். எந்த நேரமும் போர்மூண்டு விடும்போலிருக்கிறது. உமது தங்கையைச் சற்று இலை மறை காயாக வேனும் நடந்துகொள்ளச் சொல்லக்கூடாதா என்று நம் நலனில் நாட்டமுடைய நண்பர்கள் கூறுகின்றனர். நாடாள்பவனின் நாயகி, நாட்டாரின் பழிக்கும் தூற்றலுக்கும் ஆளாவதுகூடாதன்றோ?" என்றுரைக்க "ரோம்நாட்டு மக்கள் நீதி பேசுகின்றனரோ! மிகநன்று! மடையர்களுக்கு என்ன தெரியும். பாஸ்டினா, என் தங்கை. இந்தப் பஞ்சைகட்கு பயந்து வாழத்தேவையில்லை. அவள் பட்டத்தரசி, பரிமளவல்லி! ஆனந்தமாக வாழ வசதி உள்ளவள்! ஆடிப்பாடிக் காலங்கழிக்கிறாள்" என்று மதுவும் மங்கையும், மதிநிதி என்று கொண்டு மகிழ்ந்திருந்தோன் கூற, "ஆடலாம், பாடலாம், ஆனால் ஆணழகரைவேட்டையாடுவதும் அரசியார்க்கு அடுக்குமோ என்று கேட்கின்றனர்" என்று வேலையாள் மறுமொழிகூற, மலரணைமீது சாய்ந்திருந்தோன் கூறுகிறான், "என்னே மக்களின் மதி! என் தங்கை பாஸ்டினா சுந்தரி அவளைப் பெண்டாக்கிக் கொண்ட மன்னனோ, சுருங்கிய முகத்தவன், என் தங்கை தங்கச்சிலை, அவன் வளைந்த தேகத்தான், பாஸ்டினா புன் சிரிப்புக்காரி, அவன் சோகமே குடிகொண்ட முகத்தான், அவள் ஆனந்தவல்லி, இவனோ ஏங்கிக்கிடக்கும் ஏமாளி, இளமை ததும்ப, எழில் ததும்ப, காதல் ததும்ப, காட்சிதரும் பாஸ்டினா, மூப்புற்றுக் கண்கள் குழிந்து, கவலை மிகுந்து, தலை நரைத்து, உடல் இளைத்து, ஊராள்வோனானதால் உள்ளமும் காதல் வெள்ளத்தைத் தாங்கும் வகையை மறந்து கிடக்கும் மன்னனோடு, பஞ்சணையில் பதைப்புறு காதலால், முகமலரோடு முகமலர் ஒத்தி, இழுத்தும் போர்த்தும் கிடப்பளோ! ஈதென்ன மதி! கிளி மொழி மாது அந்தக் கிழமன்னனோடு, கொஞ்சிக்குலவிட, இயற்கை இடந் தருமோ! இடர்ப்படும் மனத்தினளாக மன்னன் இருத்தல் முறையன்று. பொருந்தாமணம் அது! பூரிப்பு எங்ஙனம் வரும்!" என்று கூறி விட்டு, " இனி இன்பத் துறையிலே ஆடிடும் என்னிடம், ஏக்கச் செய்திகளைக் கொண்டுவாராதே! போ!" என்று துரத்தி விட்டு தனது கேளிக்கையைத் தொடர்ந்து நடத்தலானான்! ரோமில் தானே, இக்காட்சி இருக்கமுடியும்! டோமீஷியன் இறந்த பிறகு, நெர்வா என்பான் ரோம் சக்ரவர்த்தியானான். ஆனால் கெர்வா வயோதிகரானதால், உடனிருந்து உதவி செய்ய டிராஜான் என்பானை அமர்த்திக் கொண்டான். டிராஜான் மக்கள் மனமகிழக் கோலோச்சினான். இவன், ஹேட்ரியன் என்ற இளவலைத் தன்னுடனிருந்து அரசாட்சியை நடாத்திவரப் பணித்தான். ஹேட்ரியன், பின்னர் டிராஜான் மன்னனின் நெருங்கிய பந்துவான சாபினா என்பாளை மணந்து கொண்டான், மன்னனுமானான். சக்ரவர்த்தியின் மனைவியான சாபினா, கண்டது சோகமன்றி வேறல்ல. சாபினாவை, ஹேட்ரியன், மிகக் கொடுமைப் படுத்தினான். கர்வமிக்க இவனது ஆட்சியிலே, சாபினா, சாறற்ற சக்கையான வாழ்க்கை பெற்று, வதைந்தாள். ஹேட்ரியன், தன்னை மிஞ்சினவர் எத்துறையிலும் எவருமே கிடையாது என்ற இறுமாப்புடன் கிடந்தான். ஹேட்ரியனின் வீரமிக்க காதைகளைக் கேட்டுப்பூரித்த மக்கள், பின்னர், அவனது ஆணவத்தைக் கண்டு, ஆயாசப்பட்டனர்.

இத்தகைய ஹேட்ரியன் டைடஸ் அண்டோனினஸ் என்பானைத் தனக்குப் பிறகு, ரோம்நாட்டுப் பட்டத்தரசராக வேண்டுமென்று பணித்தான். டைடஸ் அண்டோனினஸ் பெண்டாகக் கொண்ட பாதகியின் பெயரே பாஸ்டினா! அவள் வாழ்க்கைப் பஞ்சணையிலே, கொஞ்சிக் குலவிடும் குமாரர்கள் புடைசூழப் புரண்டு வாழ்ந்தாள். அவள் அண்ணன் வீரஸ் என்பான், அவளைப் போன்றே போகத்திலே புரண்டு கிடந்தான். தங்கை செய்வதைத் தகுதியே என்று அண்ணன் உரைப்பான். அண்ணனின் ஆட்டத்தை ஆமோதிப்பாள் தங்கை. இருவரும் இருக்கும் நிலைபற்றி ஊரும் நாடும் உறுமும், மன்னன் சோகிப்பான்! மன்னனோ மாசற்றவன், கசடறக்கற்றவன், பெருங்குணவான்! தனது நாயகியின் நாற்றச்செயல்கள் நாட்டாரால்தூற்றப்படுவது கேட்டுத் துயருற்றான். வேறேதும்செய்ய அவன் மனம் இடம்தரவில்லை. கெம்பீரமான மன்னன் அண்டோனினஸ், தன் மனைவியின் முறைகெட்ட நடத்தைகளைக் கேட்டு முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு வாழ்ந்தான். அவன் ஆட்சியைப் போற்றாதாரில்லை, அவன் மனைவியின் ஆபாசத்தை ஏளனம் செய்யாதாருமில்லை. அரசன் கருணை உள்ளத்தான், அரசி காமவெள்ளத்திலே ஓர்தோணி! மன்னன் மக்களை மகிழ்விப்பதே கடமை என்று கொண்டவன், அவள் பருவத்திலே, பற்பலசுகம்பெற்றுப், பூரிப்போடு வாழ்வதேமுறை என்று கண்டவள்! ஆட்சிக்கவலை அவனை யோசனையில் ஆழ்த்தும், அவள் அ
சுகத்தை எண்ணி அகமகிழ்ந்து இ
கிடைக்குமோ என்று எண்ணி

"வரியைக் குறை! வ
காட்டைத்திருத்து, கழனி
கவனி" என்று மன்னன்
பிறப்பிக்க, அந்தப்புர
"மாலைகள் தொடுத்துவ
மதுக்கிண்ணங்களை ஒ
தீட்டுபவளை அழைத்

காஞ்சி நிதி லிமிடெட்.
காஞ்சிபுரம்

1—7—42 முதல் இன்கிதியின் ஆபீஸ் சின்னக்காஞ்சிபுரம் செட்டித்தெரு, 29-B, நெ. கட்டிடத்துக்குமாற்றப்பட்டது என்பதைநமது வாடிக்கைகாரர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

K. R. CHARY, B. A.,
Secretary.

திராவிடநாடு

ஞாயிறு] 5—7—42 [காஞ்சி.

# 'டோப்ரூக்' வேண்டாம்!

சுற்றிலும் பிணங்கள்! தெருக்களெல்லாம் இரத்தக் குழம்பு! அதிலே மிதக்கின்றன போர்வீரர்களின் அங்கங்கள்! வீடுகள் தவிடுபொடி! பாதைகள் படுகுழியாயின! பார்க்கவே பயங்கரமான காட்சி, கேட்டாலே குலை நடுங்கவைக்கும் கோரம்! விநாடியும் ஓய்வின்றி பீரங்கிகள் வேட்டுகளை வீசின! விண்ணிலே ஆயிரம் விமானங்கள் உலவி, குண்டுமாரி பொழிந்தன; ஆயிரக் கணக்கான டாங்கிகள், அரண்களைத் துளைத்தன, மக்களின் உள்ளத்தை இக்காட்சிகள் பிளந்தன! வீட்டுக்கு வீடு கோட்டையாகி, ஆணும் பெண்ணும் குழந்தையும் கிழமும், துப்பாக்கியோ தடியோ, கத்தியோ கையோ, எதையோ ஆயுதமாக்கிப், போரிட்டனர். இது செபாஸ்டபூல் போர்க்களச் செய்தி! சிந்தையை மருட்டுவது. செபாஸ்டபூல் களத்திலே, ஜெர்மானியர், மிக மூர்க்கத்தனமாகத் தாக்கி, ரஷியரை நிர்மூலமாக்க எண்ணினர். அரணை அழித்து, அதற்கடுத்துள்ள கோட்டையைப் பிடித்து, ரஷியரின் உள்ளத்தைக் குலுக்கி விடவேண்டுமென்பது நாஜி திட்டம். செபாஸ்டபூல் கோட்டை, மண்மேடானாலுஞ்சரி, மக்கள் யாவரும் பிணக்குவியலாக்கப்பட்டாலும் சரி, இறுதிவரை, அதனைக்காப்பாற்ற அரும்போரிட்டே தீருவது என்பது சோவியத்திட்டம். வீரரஷியரின் வெஞ்சமர்த்திட்டத்திலே, "வேறு அரணுக்கு வாபி சாவது," "பத்திரமாகப் பின்வாங்குவது" என்பன
...யாது! போர், கடும்போர், கஷ்டநஷ்ட மேற்கும்
...க்கு எத்துணை நஷ்டம் ஏற்படுத்தமுடி
...செய்து முடிப்பது, எதிரியிடம்
...ன்பது ஏற்பட்டுவிட்டால்,
...விடமும் எதிரிக்குப்பயன்
... பிறகே எதிரி உள்ளே
...ல்லாப் படைகளை ஏவி,
... இதுவே, சிகப்புப்பட்
... வியக்கிறது, இந்தப்

... வீழ்ந்துவிட்டதாக,
... இன்றோ நாளையோ,
...ன்று எவரும் முன்பே

தீர்மானித்தேயிருந்தனர். நாஜிப்படை பலம் அங்கு அவ்வளவு அமோகமாகக் குவிக்கப்பட்டிருந்தன. இலட்சக்கணக்கான போர் வீரர்கள், சாரி சாரியாக டாங்கிகள், இடைவிடாத பீரங்கி முழக்கம், விண்ணிலே ஆயிரம் விமானம், இவைகளுக்கிடையே, அந்த அரண்! எட்டுமாத காலம் போரிட்டு நின்றது. இன்று வீழ்ந்ததென்று நாஜிகள் இயம்புகின்றனர். இதன் பயனாக, ரஷிய கருங்கடற்படைத்தளம், முக்கியமான இடத்தை இழந்துவிட்டது, இனி, இரண்டாந்தரமான துறைமுகங்களே அவைகளுக்குள்ளன. செபாஸ்டபோல் களத்துப்போர், வீரச்சரிதையில், முதலிடம் பெறும் என்பது உண்மை. ஒரு இலட்சம் ஜெர்மானியரைச் சாகடித்து, அளவற்ற டாங்கிகளை அழித்து, பிறகே, செபாஸ்டபோல், சீறும் புலியின் உடலெங்கும் வேலும் அம்பும் துளைத்தபிறகு, வீழ்வதுபோல், வீழ நேரிட்டது என்பதை வீரர் கோட்டம், அறியும். செபாஸ்டபூல் போர், சோவியத் வீரத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் என்பது திண்ணம். கருங்கடல் தளத்தை இங்ஙனம் தம் கைவசமாக்கி, அப்பகுதியிலுள்ள கடற்படையை முடமாக்க வேண்டுமென்று, ஜெர்மானியர் திட்டமிட்டு வேலை செய்வது போலவே, ஆபிரிக்காவிலே, சூயஸ்கால்வாயைப் பிடித்துக்கொண்டு செங்கடலைக் கைவசப்படுத்தி, அங்குள்ள பிரிட்டிஷ் கடற்படையைச் சிதைக்க, அல்லது சிதறடிக்க வேண்டுமென்று சீறுகின்றனர்.

டோப்ரூக் வீழ்ச்சி, பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே காரமான விவாதத்தைக் கிளப்பி விட்டது. கடந்த 100 நாட்களிலே நடந்தவற்றை எண்ணி நொந்து கொள்வோரும், சர்ச்சில் சர்க்கார்மீது காய்வோரும், பார்லிமெண்டிலே பதைப்போடு பேசியுள்ளனர். இறுதியில், சர்ச்சில்மீது கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பெருவாரியான ஓட்டுகளால் முறியடிக்கப்பட்டது. 25பேர் மட்டுமே நம்பிக்கையில்லை என்றனர். போர் முனைகளில் உள்ளவர்களுக்கு இது புத்துணர்ச்சி யூட்டுமென்று கருதுகிறோம்.

மிஸ்டர் சர்ச்சிலின் பிரசங்கம் ஆணித்தரமானது. போரின் நிலைமையை நன்குபடமெடுத்துக் காட்டிற்று. 20000 ஆயிரம் டாங்கிகள் இதுவரை ரஷியாவுக்கு அனுப்பப்பட்டதாக, மிஸ்டர் சர்ச்சில் பார்லிமெண்டில் தெரிவித்தது, குதூகல மூட்டக்கூடிய தகவல். நாஜிசத்தை வீழ்த்தப் பிரிட்டன் இத்தகைய பலமான உதவி செய்திருப்பதை எவரும் பாராட்டுவர். எகிப்துக்குப் புதுபலம் போய்ச் சேர்ந்திருப்பதாகக் குறிப்பிட்டிருப்பதும், நம்பிக்கை யூட்டுவதாக இருக்கிறது. எனினும், எத்தனை செபாஸ்டபூல்கள் நேரிட்டாலும், மக்களின் உணர்ச்சி குன்றாது, மாறாக வீரத்தை உலகுவரவேற்கும், பாராட்டும், போற்றும். கடைசிவரை எதிர்த்துப் போராடுவது என்றவார்த்தை பிரிட்டிஷ் போர் முறையில் புகவேண்டும். சோவியத்திடமிருந்து இதனை இன்னமும் தெரிந்துகொள்ளாதது வருந்தத்தக்கதே. செபாஸ்டபூல் வீழ்ச்சி என்றால், தலைகுனியத் தேவையில்லை. வெட்கம் ஏற்படக்காரணமில்லை, ஆனால், டோப்ரூக் வீழ்ச்சி அத்தன்மையதோ! ஆயிரம் செபாஸ்டபூல் சம்பவங்கள் நேரிடினும், 'இனி மற்றோர் டோப்ரூக் நேரிடக் கூடாதென்பதே நமது அவா. பார்லிமெண்ட் விவாதத்திற்குப் பிறகு, மிஸ்டர் சர்ச்சில், போர்முறையிலே புதிய முறுக்கு உண்டாகும்படி செய்வார் என்று நம்புகிறோம்.

## திராவிடத் தொண்டர் படை மாநாடு.

மேற்படி மாநாடு விருதுநகரில் 12—7—42-ல் தோழர் C. N. அண்ணாதுரை தலைமையில் நடைபெறும். பெரியார், பாண்டியனார், விஸ்வநாதம் ஆகிய தலைவர்கள் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

## வந்தவாசியில் நீதிக்கட்சிக் கூட்டம்

வந்தவாசியில் 21ந் தேதி மாலே 5-30 மணிக்கு, மாபெரும் நீதிக்கட்சிக் கூட்டம் நடைபெற்றது. சொற்பொழிவாளர்களே யூனியன் ஆபீசிலிருந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். சிவன் கோயில் முன்ப,. தோழர் தங்கவேலர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தேசூர். ஆரணி. சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர். குறிப்பாக வாலிபர்கள் மிக்க உற்சாகததோடு இருந்தனர். தேசூர் தோழர் ரங்கசாமி அவர்கள் தமிழ் இசை பாடியபிறகு, தோழர்கள் ரஜாக். துரைசாமி, அலிபீர் சாகிப், ஆகியோர், தற்கால அரசியல் நிலேமை பற்றிப் பேசினர். காஞ்சீபுரம் மாஜி முனிசிபல் கவுன்சிலர் தோழர் C. ராஜகோபால் தமிழ் நாட்டிலே இந்து முஸ்லீம் பிணக்கின்றி இருப்பதை விளக்கி, வடநாட்டுத் தலைமை நமக்கு வம்பேதரும் என்று பேசி, நீதிக் கட்சியை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சின்னக் காஞ்சீபுரம் பார்ப்பன ரல்லாதார் இளேஞர் கழகத் தலைவரும், சுயமரியாதை இயக்க வீரருமான தோழர் T. P. S. பொன்னப்பனூர் ஆரியர்கள் சேட்டை, ஆச்சாரியார் சூது, காந்தியாரின் கவைக் குதவாத்திட்டம் ஆகிய வற்றினை விளக்கி தமிழர்கள் ஒன்றுபட்டு, திராவிட நாட்டுப் பிரிவினைக்காகப் பாடுபடவேண்டுமென்று, ஆவேசத்துடன் சொற்பொழி வாற்றினர்.

தோழர் C. N. அண்ணுதுரை தமிழகம் அன்றும் இன்றும் என்பது பற்றிப் பேசி, திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை விளக்கிப் பேசினர்.

தலைவரின் முடிவுரை வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

விரைவில். வந்தவாசி தாலூக்கா நீதிக் கட்சி மாநாடு நடத்த வேண்டியதற்கான ஏற்பாடுகள் பற்றி கலந்தாலோசிக் கப்பட்டது.

## தமிழர் கூட்டம்

வடாற்காடு திருப்பத்தூரில் 26ந்-தேதி மாலே பாஞ்சாலி மைதானத்தில், தோழர் கவிநயம் கந்தசாமி அவர்கள் தலைமையில் நடந்த தமிழர் கூட்டத்தில். திருப்பத்தூர் திராவிட வாலிப சழகத்தினர். தோழர் C N. அண்ணுதுரைக்கு ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தனர். வாணியம் பாடி வைஸ் சேர்மன் தோழர் V. S விஸ்வநாதம், யுத்தத்தைப் பற்றியும் தமிழர் கடமை பற்றியும் விளக்கமாகப் பேசினர். தோழர் அண்ணுத்துரை திராவிடநாடு தனி நாடு என்பது பற்றிப் பேசினர், தலைவர் முடிவுரை வந்தனோபசாரத்துடன் இரவு 9-மணிக்குக் கூட்டம் முடிந்தது.

தோழர் A. P. முருகேசன்

தோழியர் சுந்தராம்பாள்

## தமிழ்த் திருமணம்

வடாற்காடு வட்டாரம் திருப்பத்தூர் நகாப் பிரமுகர் காலஞ்சென்ற தோழர் V S. பழனிச்சாமி முதலியார் திருமகளார் தோழியர் சுந்தராம்பாளமமைக்கும், தோழர் செலந்தம்பள்ளி A. பழனிசாமி முதலியார் திருமகனர் தோழர் A. P. முருகேசனருக்கும், 26—6—42 காலேயில். தமிழ்த் திருமணம், விமரிசையாக நடைபெற்றது. உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் ஏராளமாகக் கூடி யிருந்தனர். மண வீட்டில் அலங்காரப் பந்தலமைத்து, ஆங்கு, டாக்டர் நாயர் தியாகராயர் பானகலரசர், பெரியார், செல்வம், ஆகிய தலைவர்களின் திரு உருவப்படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

சடங்குகளும், புரோகிதரும் நீக்கப்பட்டு, தூய தமிழ் முறையில், திருமணம் நடந்தேறியது மண மக்களே வாழ்க்கை ஒப்பந்தப் பத்திரத்தைப் படித்துக் கூறும்படியும், மாலே மாற்றிக்கொள்ளும்படியும், திருமணத்தை நடத்திவைத்த தோழர் C. N அண்ணுதுரை. கூறினர். மணமக்கள். வாழ்க்கை ஒப்பந்தத்தை வாசித்தனர். திருமணம் ஐந்து நிமிட நேரத்தில் முடிந்தது. பின்னர் மண மக்களுக்கு, ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டன.

தோழர் கவிநயம் கந்தசாமி அவர்கள். தமிழ்த் திருமணம் பற்றிப் பேசும்படி கூற, தோழர் C. N. அண்ணுத்துரை சுமார் இரண்டுமணி நேரம், பண்டைத் தமிழகம், இடைக்காலத்தே நேரிட்ட இழுக்கு, இன்றைய எழுச்சி, எதிர்காலம், எனும் பொருளமைத்து சொற்பொழி வாற்றினர்.

விருந்துக்குப் பிறகு மாலே 3 லிருந்து 5-மணிவரை இசை விருந்து தோழியர்கள் N. S. சகோதரிகளால் நடைபெற்றது.

காலஞ்சென்ற தோழர் V. S. பழனிச்சாமியாரின் சகோதரர், தோழர் V. S. வீரபத்திர முதலியார், மண வினைக்கு வந்தோரை அன்புடன் வரவேற்று உபசரித்து, மகிழ்வித்தார்.

திருமணத்தை யொட்டி, விடுதலே, சண்டே அப்சர்வர், திராவிட நாடு, ஆகிய மூன்று பத்திரிகைகளுக்கும் ஐந்தைந்து ரூபாய் நன் கொடை தரப்பட்டது.

பிரபல குடும்பத்தில் நடைபெற்ற இத்தமிழ்த் திருமணத்தைப் பலரும் பாராட்டியதோடு, இது போன்றே இனி நாமும் செய்ய வேண்டும் என்றும் உறுதி கொண்டனர். வாழ்க மணமக்கள்! வாழ்க வீரபத்திரர்!


பொள்ளாச்சி

P. N. இராமானுசம்

இயற்றிய

"திராவிடப் போர்முரசு"

திராவிடர்களின் பண்டைய பெருமைகளும், அன்று ஆண்ட தமிழ் மன்னர்களின் வாகை வரலாறுகளும், திராவிட நாடு பிரிக்கப்படவேண்டிய அவசியங்களும், பிரிவினைக்கான மேல்நாட்டு அனேக சரித்திர ஆதாரங்களுடன் விரிவாக வரையப்பட்ட உயரிய நூல்.

115-பக்கம்.] [15-படங்களுடன்

விலே அணு 0—5—0.

6-அணு தபால்தலே அனுப்பினல் புக்போஸ்டில் 1-புத்தகம் அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:-

A. மாணிக்கம்,

மானேஜர்,

பெரியார் வாலிபர்சங்கம், பொள்ளாச்சி.


### திருமண அழைப்பு.

~ -:- ~

அன்புடையீர்!

(6—7—42) திங்கட்கிழமை காலே 9-மணியளவில், மேலராசவீதி எனது இல்லத்தில்,

**எனக்கும்,**

தஞ்சை தோழர் K. M. சாமிநாயுடு அவர்கள் திருமகள்.

**பக்தவத்சலாவுக்கும்**

திருமணம் நிகழும்.

நெடும்பலம் குறுநிலமன்னர், N. R. சாமியப்பா M. L. C. அவர்கள் தலைமையில், பெரியார் ஈ. வே இராமசாமி அவர்கள் திருமணத்தை நடத்திவைப்பார்கள். இவ்வூர் அறநெறிச் செல்வரும், பெருநிலக்கிழவருமாய உயர்திரு கோ. பாலகிருட்டின முதலியாரவர்கள் வாழ்த்துரை கூறுவார்கள். அன்பர்கள் வருக!

அன்பன்,

**K. R. G. பால்,**

முனிசிபல் கவுன்சிலர் &

டைரக்டர், கோ-ஆப்ரேட்டிவ் அர்பன் பாங்கு.

# எந்த நாள் வருமோ?

...(பாரதிதாசன்)...

இராகம்: விஜயநாகரி. தாளம்: ஆதி.

பல்லவி

அந்த வாழ்வுதான் எந்த நாள்வரும்?

அநுபல்லவி

இந்த மாநிலம் முழுதாண்டிருந்தார்
இணையின்றி வாழ்ந்தார் தமிழ்நாட்டு வேந்தர் (அ

சரணம்

1. ஒலி என்பதெல்லாம் செந்தமிழ் முழக்கம்
ஒளி என்பதெல்லாம் தமிழ்க் கலைகளாம்
புலி, வில், கயல் கொடி மூன்றினால்
புதுவான மெங்கும் எழில் மேவிடும் (அ

2. குறைவற்ற செல்வம் வாழ்வில், இன்ப வாழ்வு
கொண்ட தமிழனுள்ளம் கண்ட தமிழிசை
பிற மாந்தர்க்கும் உயிரானதே
பெறலான பேறு சிறிதல்லவே (அ

5ம் பக்கத் தொடர்ச்சி. ரோமாபுரி ராணிகள்.

யாரார் உள்ளனர் என்று பார்த்துவா, விருந்துக்கு ஏற்பாடு செய், நடன சுந்தரிகளைக் கூப்பிடு, கீதங்களைத் துவக்கச்செய்'' என்று கட்டளைகளிட்டு, களிப்பாள்! சோக உலகிலே மன்னன், சிருங்கார உலகிலே அவள்!

பாஸ்டினாவின் இளமையும் எழிலும், ரோம்நாட்டுக் காமாந்தகாரப் பொருளாயின, மன்னனின் மனவேதனைக்குக் கணைகளாயின. ஹேட்ரியனை மணாளனாகப்பெற்ற சாபினா, சோகித்துச் சுகமிழந்து, செத்தாள், பாஸ்டினாவை மணஞ்செய்துகொண்ட மன்னனே, அவளால், அவமானபுரிக்கு அரசனானான்! பாஸ்டினா, மன்னனின் வாழ்க்கைக்கே ஓர் களங்கமாக விளங்கிவந்தாள். பாஸ்டினாவின் இளமை முதலே, பட்டத்தரசியாவதற்கு முன்பிருந்தே அவளுக்கு, சொகுசாக வாழ்வதிலும், சிரித்துக் குலுக்கிச் சிங்காரியாக இருப்பதிலும், செந்தேன் பருகிடும் வண்டுபோல், ரீங்காரமிட்டு வாழ்வதிலும், தாராளமாக உலவி, சலிக்குமளவு குலவிடுவதிலுமே வேட்கை! சுபாவத்துடன், இளமையின் விறுவிறுப்பும், அந்தஸ்துத்தந்த வசதிகளும் சேரவே, அவளது ஆனந்த கீதம் பாவ ராகதாளம் பொருந்திய சங்கீதமாக அவளுக்கு இருந்தது. முதிர்ந்த வயதும், முற்றிய அறிவும், தணிந்த உணர்ச்சியும் பெற்ற மன்னன், அவளுக்கு எவ்விதத்திலும் ஜோடியல்ல! எனவே, அவள் அவனை, மணாளனாகக் கொண்டதால் மகிழ்வேதுங் கொண்டாளில்லை. கண்ணுக்கும் கருத்துக்கும் இனியவனைக் கண்டுபிடிக்கும் பரீட்சையிலே பாஸ்டினா காலந்தள்ளி வந்தாள். அஃது விஷப்பரீட்சையன்றோ! சிரித்துக்கொண்டே வாழ்ந்துவந்த சிங்காரி, தனது 37-ம் வயதில் மாண்டாள். மன்னன், அவள் மரணமுற்றது கண்டு, மதிகெட்டவள் என்றாலும் நம் மனைவி என்று சோகித்தான். பாஸ்டினாவின் மகளை, அன்போடு வளர்த்து வந்தான். தனக்குப் பிறகு பட்டத்தரசனாகவேண்டி, மார்க்கஸ் அரேலியஸ் என்ற இளைஞனை ஏற்பாடு செய்திருந்தான். அந்த மார்க்கஸ் அரேலியசுக்குத் தன்மகளைத் தந்தான். மகளோ, மாதாவை நல்லவளாக்கி விட்டாள்!

## பூங்கோதை உதயம்

காரப்பிடாகை திராவிட வாலிப சங்கத் தலைவர் தோழர் S. பக்கிரிசாமியின் வாழ்க்கைத் துணைவியார் திருவாட்டி விசாலாட்சி அம்மையாருக்கு 2—6—42ல் ஓர் பெண் குழந்தை பிறந்தது குழந்தைக்குப் பூங்கோதை என்று பெயரிடப்பட்டது. மேற்படி மகிழ்ச்சியான சம்பவத்தை யொட்டி 'திராவிட நாடு' பத்திரிகைக்கு, 1-ரூபாய் நன்கொடைதரப் பட்டது.

## அடுத்த இதழில்!

பண்டைத் தமிழரின் வீரம்,

~

அநபாயசோழனின் காலம்!

~

தொண்டைமான் தீரம்!

~

கலிங்கப்போர், காதல் உள்ளம்!

~

ஆகியவற்றினை விளக்கும் இனிய புதிய தொடர்கதை

வெளிவருகிறது!

~

தீட்டுபவர்

சௌமியன்.

~

கதையின் பெயர்,

?

அடுத்த இதழில் காணவும்!

4-ம் பக்கத் தொடர்ச்சி. அவனை மயக்கியவள்!

சென்னை
5—12—* *

'ஆனந்தராசனுக்கு அறிவிப்பது:

நீ, இது வரையில் எத்தனையோ பெண்களைக் கெடுத்தாய். எத்தனையோ பெண்களின் வாழ்க்கை உன்னால் அழிந்தது. உன்னுடைய முதல் மனைவி உன் கொடுமை தாங்காமல் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தாள். இரண்டாவது மனைவி உன்னை விட்டு விட்டு எங்கேயோ ஓடிவிட்டாள். இவைகளை யெல்லாம் நீ சாமர்த்தியமாக மறைத்து விட்டுச் சிறந்த தேசாபிமானியாக விளங்குகின்றாய். உன்னுடைய உண்மையான யோக்கியதையைப் பொதுமக்கள் அறியாவிட்டாலும் என்னைப் போன்ற சிலர் அறிந்து தான் இருக்கின்றனர். இதுவரையில் நீ எத்தனையோ பேரை வியாபாரத்தில் மோசம் செய்து இருக்கின்றாய். ஏழைகளின் உழைப்பைக் கொண்டு நீ சுகமாகக் காலம் தள்ளி வருகின்றாய். சில சமயங்களில் நீ சிறந்த பக்திமானைப் போலவும் நடிக்கின்றாய். எல்லாம் வெறும்வேஷம். ஆனாலும் பாமரமக்கள் உன்னைப் பெரிய மனிதன் என்று நினைக்கிறார்கள். நான் அப்படி நினைக்க வில்லை. நீ இப்பொழுது ஆனந்தவல்லி என்னும் அந்தச் சூதுவாது அறியாத, தாய் இல்லாத, பெண்ணை ஏமாற்றப்பார்க்கிறாய். இனி, நீ அவள் விஷயத்தில் தலையிடுவாயானால் உன்னை இலேசில் விடப்போவதில்லை. நேற்று நீ திருவல்லிக்கேணி கடற்கரையில் அந்தப் பெண்ணோடு உலவியதை நான் பார்த்தேன். என் மனம் எரிந்தது. இனி, நீ அந்தப் பெண் விஷயத்தில் தலையிடவேண்டாம். அவளை மறந்து விடு. மற்றொரு விஷயமும் இப்போது நான் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். நாளை இரவு ஆனந்தவல்லி விரும்பினாலும் நீ அவளைச் சந்திக்கக் கூடாது. அதற்குப் பின்னரும் நீ அவளைச் சந்திக்கக்கூடாது. இந்த என்னுடைய கட்டளையை நீ மீறி நடப்பாயானால் உனக்கு நிச்சயமாக நஷ்டம் வரும். எச்சரிக்கை! எச்சரிக்கை!!

வீரரட்சகன்.

இதைபடித்தவுடன் ஆனந்தராசன் மிகவும் அலட்சியமாக, 'இந்த அயோக்கியன் இது வரையில் எத்தனையோ ஏமாந்த பேர் வழிகளைக் கொள்ளை யடித்து இருக்கிறான், என்னையும் இவன் அவர்களில் ஒருவன் என்று எண்ணிக் கொண்டான் போலும். இவன் எந்த வகையிலும் என்னை ஏமாற்ற முடியாது. என்னிடத்தில் எப்போதும் கைத்துப்பாக்கி இருக்கிறது. எனக்கு அறிவும் இருக்கிறது. இவன் என்னை என்ன செய்ய முடியும்? என் தேகத்தில் நல்ல பலமும் இருக்கின்றது. எனக்கு நல்ல குத்துச்சண்டையும் தெரியும். எத்தனை பேரானாலும் நான் ஒரு கை பார்த்து விடுவேன்; போலீஸ் காரர்கள் தயையும் வேண்டிய தில்லை. இன்றைக்கு அவசியம் நான் ஆனந்தவல்லியைப் பார்த்துத்தீருவேன், 'என்று தன்னுள் பேசித் தீர்மானித்துக் கொண்டான்.

அன்று மாலை அவன் ஆனந்தவல்லியைக் கடற்கரையிற் சந்தித்து அவளோடு ஆனந்தமாக ஒரு மணி நேரம் வரையில் உலவும் பொழுதும் உட்கார்ந்திருந்த போதும்பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் அவளிடம் வீரரட்சகன் எழுதிய கடிதத்திலிருந்த விஷயத்தைச் சொன்னான். 'நீங்கள் சாக்கிரதையாக இருங்கள். எனக்குப் பயமாயிருக்கிறது. நாமிருவரும் ஒருவரை யொருவர் விரும்பினால் அந்தப்பாவிக்கு வந்த கஷ்டமென்ன? நஷ்டமென்ன? அவனுக்குப் பயந்து என்னைவிட்டு விடாதீர்கள்! விட்டு விடாதீர்கள்" என்று அவள் கெஞ்சினாள்.

'கண்ணே! நான் உன்னைக் கைவிட மாட்டேன்,' என்று அவன் அவளுக்கு உறுதி கூறினான்.

பிறகு கால் மணி நேரம் வரையில் அவர்கள் ஒருவரோடொருவர் தேனும் பாலும் கசிவது போலப் பேசிக்கொண்டிருந்து விட்டுப் பிரிந்து அவரவர் வண்டியில் ஏறிக்கொண்டு அவரவர் பங்களாவுக்குப் போய்ச்சேர்ந்தனர்.

மறு நாள் முதற்கொண்டு ஆனந்தராசனை அவன் அறியாதபடி ஓர் ஆள் அவன் போகு மிடங்களி லெல்லாம் ஒரு சிறிய மோட்டார் வண்டியில் தொடர்ந்து கொண்டிருந்தான்.

இரண்டு தினங்கள் சென்றன. மூன்றாவது நாள் ஆனந்தராசன் 'இம்பீரியல் பாங்கியில் இருக்கும் தன்னுடைய ஐந்து இலட்சம் ரூபாய்களில் ஓர் ஐம்பதினாயிரம் ரூபாய்களைப் பலவிதநோட்டுக்களாக வாங்கித் தன்னுடைய கைப்பையில் பத்திரப் படுத்திக்கொண்டு தன்மோட்டார்வண்டியில் ஏறித் தன்பங்களாவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். அவன் பாதி வழியில் போகையில், அவன் எதிரே ஒரு மோட்டார் வண்டி வந்தது. அதில் ஆனந்தவல்லி இருந்தாள்! அவள் இவனைப் பார்த்தாள்; இவனும் அவளைப் பார்த்தான். உடனே இருவர் வண்டிகளும் ஒரு புறமாக நின்றன. உடனே ஆனந்தராசன் வண்டியைவிட்டு இறங்கி ஆனந்தவல்லியின் வண்டியின் அருகிற் சென்று அவளைப் பார்த்து, 'என்ன சமாசாரம்' என்று அவசரமாகக் கேட்டான். உடனே அவள் ஒன்றும் சொல்லாமல் அவன் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். அந்தக் கடிதத்தை அவன் பிரித்துப் பார்த்தான். அதில் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது.

சென்னை
7—12—**

ஆனந்தவல்லி,

நீ இப்பொழுது எவனை விரும்புகிறாயோ அவனை இனிமேல் விரும்புவதை விட்டுவிடு. என் கட்டளையை மீறி விரும்பினால் உனக்கு எந்த நிமிஷத்திலும் ஆபத்து நேரக்கூடும்.

வீரரட்சகன்

இதை ஆனந்தராசன் படித்தவுடன், ஆனந்தவல்லி அவனைப்பார்த்து, 'காதலரே என் தந்தை ஊரில் இல்லாத சமயத்தில் வந்த இந்தக் கடிதத்தைப் பார்த்து நான் பயப்படுகிறேன். நீங்கள் இப்பொழுதே என்னுடன் என்னுடைய வீட்டிற்குவந்து எனக்குத் தகுந்தபடி போலீஸ் காவலை ஏற்படுத்திவிட்டு உங்கள் வீட்டிற்குப் போகவேண்டும். தயைசெய்து நீங்கள் இதைச்செய்யுங்கள், 'என்று இரக்கத்தோடு வேண்டிக் கொண்டாள்.

அப்படியே செய்வதற்கு ஆனந்தராசன் சம்மதித்தான். பிறகு அவன் ஆனந்தவல்லியின் மோட்டார் வண்டியை முன்னே செல்லச்சொல்லித் தான் பின்னே செல்லுவதற்காகத் தன் வண்டியில் ஏறப் போனான். அப்பொழுது ஆனந்தவல்லியின் மோட்டார் வண்டி அவளோடு அவ்விடத்திலிருந்து அவன் கட்டளைப்படி முன்னால் புறப்பட்டுச் சென்றது.

ஆனந்தராசன் தன் மோட்டார் வண்டியில் ஏறுவதற்காகச் சென்றான், திடுக்கிட்டான்! ஏன்? அவன் வண்டியிலிருந்த டிரைவரையும் நோட்டுகள் இருந்த கைப்பையும் காணோம். அவன் அடைந்த திகிலுக்கு அளவில்லை. உடனே அவன் தன் மோட்டார் வண்டியைத் தானே ஓட்டிக்கொண்டு சமீபத்திலிருந்த பூக்கடைப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நடந்த விஷயங்களைச் சொல்லிப் பிரியாது கொடுத்துவிட்டு நேரே மயிலாப்பூரிலுள்ள ஆனந்தவல்லியின் பங்களாவுக்கு சென்றான். அந்தப் பங்களாவின் வெளிக்கதவு பூட்டப்பட்டு அதில் 'வாடகைக்கு விடப்படும்' என்னும் அட்டை தொங்கிக்கொண்டிருந்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்ததில் 'நேற்றைய

அறிவியற் பகுதி

# இந்துமதமுந் தமிழரும்

முன் தொடர்ச்சி.

[ நக்கீரன். ]

“திராவிட நாடு” வெளிவந்த நாளிலிருந்து இதுவரை **“இந்துமதமுந் தமிழரும்”** என்ற தலைப்பின்கீழ் அதுகுறித்த விளக்கங்கள் சிலவற்றை எழுதித் தமிழ் மக்களுக்கு அதன் வேண்டாமையை ஓரளவு தெளிவுபடுத்தினேன். இன்னுந் தொடர்ந்து அதைப்பற்றி எழுதுவதற்குத் தடையாகத் தமிழ் மக்களுக்குப் பெரிதும் இன்றியமையாத சீர்திருத்தத் துறைகள் பற்றிய பல கட்டுரைகளைத் “திராவிட நாடு” ஏற்றுதவவேண்டியிருப்பதால், “இந்துமதமுந் தமிழரும்” என்பதுபற்றிய சுருக்கமான முடிவை இக்கட்டுரையில் கண்டு, இந்துமதப் பிடிப்பினின்றும் விடுபடுமாறு தமிழ்மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆரியமக்களால், தங்கள் பிழைப்புக்காக உண்டாக்கப்பட்ட இந்துமதமானது தமிழ்நாட்டிற் பரவியதற்குக் காரணம், அக்காலத் தமிழ்மன்னரின் ஆதரவைப் பெற்றிருந்த ஆரியரின் சூழ்ச்சியேயாகும். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் சூழ்ச்சியுரைகளால் கள்ளங்கவடற்ற மக்களை ஏய்ப்பது மிக எளிதாக முடியக்கூடிய காரியமாகும். தங்களைப்போலவே பிறரையும் எண்ணும் நல்லியல்போடு கூடிய அக்காலத் தமிழ்மக்கள், ஆரியரின் வஞ்சக மொழிகளையெல்லாம் நெஞ்சொடு பிணைந்த சிறந்த நன்மொழிகள் என நம்பியதால், தமிழ்மக்களின் நல்வாழ்வுக்கு நஞ்செனவந்த இந்து மதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களானார்கள். இந்துமதமாகிய ஆரியக்கோட்டை இருக்கு—எசுர்—சாமம்—அதர்வம் என்ற நான்கு தூண்களால் நிறுத்தப்பட்டு, அதன் நடுவே “மனுஸ்மிருதி” என்ற ஒரு பள்ளத்தை உண்டாக்கி, அப்படுபள்ளம் பழுதுறாதபடி ஆகம உபநிடதங்களால் கெட்டியான மதில்கள் கட்டித், தமிழ்மக்களை அப்பள்ளத்தில் வீழ்த்துவதற்காக அக்கோட்டையைச் சுற்றிலும், புராண இதிகாசங்கள் என்ற படிகளை அமைத்துத், தேவார, திருவாசகநாலாயிரப் பிரபந்தங்களை அப்படிகளை ஏறிச்செல்லும்போது தவறிவிழாத கைபிடிச்சங்கிலிகளாக அமைத்து விட்டார்கள். இருக்கு முதல் புராணம் ஈறாகவுள்ள மதநூல்களே தமிழ்மக்களின் இன்றைய கீழ்நிலைக்குக் காரணமாகவுள்ளன. எனவே, தமிழ்மக்களாகிய நாம் இந்துமதப் படுகுழியினின்றும் மீளவேண்டுமானால், அதற்கு ஆதரவாக நிற்கும் வேத—புராண இதிகாசங்கள் என்று சொல்லப்படும் நூல்களையும், அவற்றிற் பேசப்படும் கடவுளரையும், அவர்கள் குறித்த வழிபாட்டு முறைகளையும் முற்றிலும் ஒழித்தாகவேண்டும். இவற்றை ஒழிப்பதற்குக் கையாளவேண்டிய முறைகள் பலவற்றுள் முதன்மையாகக்கொள்ள வேண்டியமுறை, வேதபுராண இதிகாச தேவார திருவாசக பிரபந்தங்களைத் தம்மதெனக்கருதி மயங்கி நிற்கும் நம்மவரின் மனப்பான்மையை முதலில் இல்லாதொழியச்செய்தல் வேண்டும். நம்மவர் பலருக்கிருக்கும் இம்மயக்கத்தை ஒழிப்பது எளிதில் முடியக்கூடிய காரியமல்லவென்றாலும் ‘முயற்சி திருவினையாக்கும்’ என்ற முதுமொழியைக்கடைப்பிடித்துக் காரியத்தில் முயன்றால் கைகூடுவது உறுதி.

எனவே, மதத்தில் பற்றுவைத்துக், கடவுளிடத்து அன்பு பூண்டு, புராண இதிகாசங்களைப் படித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு தமிழனையும் காணநேரும்போதெல்லாம், மதமயக்கத்தைப்பற்றியும், கடவுள் கற்பனையைப் பற்றியும், புராண இதிகாசங்களிலுள்ள பு[illegible]துரைகளைப் பற்றியும் தெளிவாகவும் அமைதியாகவும் எடுத்துக்கூறி விளக்குவதை **ஒவ்வொரு பகுத்தறிவாளனும் தனது கடமைகளில் ஒன்றாகக் கொள்ளவேண்டும்.** மதத்தின் பேராலும்—கடவுளின் பேராலும்—புராண இதிகாசங்களின் பேராலும் இதுவரை மக்கள் அடைந்த நன்மை எதுவும் இல்லை என்பதை அவர்கள் நன்குணரும் முறையில் தெளிவுபடுத்தவேண்டும். மதத்தைக் கைவிட்ட மக்கள்—கடவுளைக் கட்டியழாத மக்கள்—புராண இதிகாசங்களைப் புத்தியிற்செலுத்தாத மக்கள் தங்கள் வாழ்க்கையை எப்படிக் கண்ணியமாக நடத்தி முன்னேறி வருகிறார்கள் என்பதைச் சுட்டிக் காண்பிக்க வேண்டும்.

மக்களைக் காப்பது கடவுளின் வேலையென்றால், மக்கள் கடவுளைக் காக்க முயல்வது பகடிக் கூத்தாகும் என்பதனைக் கடவுள் அன்பர்களுக்கு உறைக்கும்படி செய்தல் வேண்டும். ‘மதம்’ என்ற சொல்லின் பொருள் ‘வெறி’ என்பது தானே; வெறியற்ற மக்களுக்கு வெறியை உண்டாக்குவது முறையாகாதென்பதனை மதப்பற்றுடையார் மதியில் பதியுமாறு செய்தல் வேண்டும். புராண இதிகாசங்கள் எல்லாம் புளுகு மூட்டைகள் என்பதனை அந்தப் புலவர்கள் உணருமாறு செய்தல்வேண்டும். கடைசியாக, மதம்—மயக்கத்தையும்; கடவுள்—கண்ணியக் குறைவையும்; புராண இதிகாசங்கள் புன்னெறியையும் தருபவை என்பதை அவைகளில் பற்றுடையார் பற்றுமாறு செய்வதில் ஒவ்வொரு பகுத்தறிவாளனும் கண்ணுங் கருத்துமாய் இருந்து வேலைசெய்தால், எண்ணிய எண்ணியாங் கெய்துவதில் எத்துணையும் ஐயம்இல்லை. எங்கே பார்ப்போம், பகுத்தறிவுலகை உண்டாக்கும் உங்கள் திறமையை!

---

9-ம் பக்கத் தொடர்ச்சி, அவனை மயக்கியவள்.

தினமே அதில் இருந்தவர்கள் காலிசெய்து கொண்டு போய்விட்டார்கள், என்று அவர்கள் சொன்னார்கள். இதைக்கேட்டவுடன் ஆனந்தராசனின் அடிவயிற்றில் நெருப்புப் பற்றி எரிந்தது.

மறுநாள் ஆனந்தராசனுக்கு ஒரு கடிதம்வந்தது. அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

சென்னை
9—12—**

ஆனந்தராசனுக்கு,

என்னை, நீ மிகமிகச் சாதாரணமானவன் என்று எண்ணிக்கொண்டாய் அல்லவா? இப்பொழுது உன்னுடைய சாமார்த்தியம் எப்படிப்பட்டது என்பதை நீ எண்ணிப்பார். இரண்டு மாதங்களுக்கு முன் உன்னிடம் வேலையில் அமர்ந்த உன்மோட்டார் வண்டி ஓட்டி என்னுடைய ஆள் என்பதை நீ இப்போது தெரிந்துகொள். உன்னை மயக்கியவளாகிய ஆனந்தவல்லி என் இஷ்டப்படி நடக்கக்கூடியவள் என்பதையும் நீ மிக மிக நன்றாகத்தெரிந்துகொள். இனியாவது வீரராட்சகன் என்றால் உனக்குக் கொஞ்சமாவது அச்சம் ஏற்படக் கூடுமல்லவா?

வீரராட்சகன்

மறுதினம் இந்த விஷயம் சென்னைநகரம் முழுதும் பரவியது. பத்திரிகைகள் எல்லாம் இவ்விஷயத்தை வெளியிட்டன. ஆனந்தராசன் வெட்கமும் துக்கமும் அடைந்தான்!

2ம் பக்கத் தொடர்ச்சி — நவீன் விக்கிரமாதித்தன்

தமிழர் கூட்டம். வடநாட்டவரின் அக்கரமம்பற்றிப் பெரியார் பேச்சு, அதற்கு ஆங்கிலமொழி பெயர்ப்பு, டாக்டர் அம்பேத்கார் தலைமை. தமிழர் அஞ்சாது, வடநாட்டிலேயே, வடநாடு வேறு தென்னாடு வேறு என்பது பற்றியும், காங்கிரசின் கட்டு உடைக்கப்பட வேண்டுமென்பது பற்றியும், முழக்கம் செய்தார். சென்ற ஆண்டிலோ அரித்துவாரம், டேராடூன், பாட்னா, லாகூர், லக்னோ, சாரான்பூர், கல்கத்தா முதலிய வடநாட்டுத் தலைநகர்களில், தமிழர் வீரம் விளங்கச்செய்தார். இங்ஙனம், புலியை அதன் குகையிலேயே சென்று எதிர்த்தபோது கல்லோ, மண்ணோ, வடநாட்டார் வீசினாரில்லை! வடவரை வாழ்த்தி அவர் தலைமையை வணங்கி, அவர்களின் வஞ்சகவலையை வீசும் வேலையில் அமர்ந்து, வடநாட்டாரின் வழியே சரி என்று கருதிவந்த ஆச்சாரியார், ஒரு சிறு எதிர்ப்பு செய்தார், பாருங்கள் அவர் அங்கு பட்டபாட்டை, தார்பூசினார்கள்!! ஆம்! சேரன் செங்குட்டுவன் வழி வந்த செந்தமிழர், சிங்கத்தையொத்த இயல்பினர், நரிக்குணமே நன்றெனக்கொண்ட மனுவழியன்றோ ஆச்சாரியார் வந்தவர். எனவேதான் அவர் அல்லல் பட்டார் வடநாட்டிலே.

பிரிடிஷ் மன்னர் எட்டாம் ஹென்ரி, என்பாருக்கு அமைச்சராக இருந்து அரும்பணி பலஆற்றி, அரசனின் நலனே பெரிதெனக்கொண்டு அதற்காக உழைத்த, அமைச்சர், வுல்சி என்பவரை, பிறகு அதே எட்டாம் ஹென்ரி வேலையினின்றும் விரட்டி, கொடுமை செய்தபோது, மன்னனுக்குழைத்து, உடல் இளைத்த வுல்சி மனம் நொந்து, "மன்னனுக்கு மனமார உழைத்ததிலே பாதி அளவேனும் நான், தேவனுக்காகச் சேவை செய்திருப்பின், அவர் என்னை இங்ஙனம் கைவிட்டிருக்கமாட்டார்" என்று மனங்கசிந்து கூறினனும். ஆச்சாரியாரும், "காந்தியாருக்காக, காலமுழுவதும் நான் இங்ஙனம் பாடுபட்டு உழைத்ததுபோல், நாட்டுக்கு, மக்கள் நலனுக்கு உழைத்திருந்தால், இக்கதியா நேரிட்டிருக்கும்" என்று கசிந்துருகிக்கூறுவாரோ யேதோ நானறியேன். ஆனால் அவர் நிலை அத்தன்மையதாகவே இருக்கக் காண்கிறேன். பாபம்! மந்திரிவேலை கிடைத்ததும் அவர் அடைந்த பூரிப்பு எவ்வளவு! அவரது அடியார் கூட்டம் அடைந்த ஆனந்தம் எவ்வளவு! கண்டறியாதன கண்டோம் என்று விகடன் பூரிப்போடு எழுதிற்றே! இன்று எங்கே அந்தப்பூரிப்பு? ஆச்சாரியாரின் ஆட்சிக்கால ஆணவமெங்கே? அதிகாரப்பேச்சு எங்கே? அசைக்க ஆள் கிடையாது என்றுரைத்த இறுமாந்த பேச்சு எங்கே? சட்டசபையிலே கட்டுக்கடங்காது கனல்கக்கிய காட்சி எங்கே? அதிகாரம்போய், ஆர்ப்பாட்டம்போய், ஆதரவும் கருகி, அபலை போலானாரே ஆச்சாரியார், இப்போதாவது உணருகிறாரா, தமிழரைப் பகைத்தால், தரணி தாங்காது என்பதை. பரிதாபத்துக்குரிய பட்டியும், விரசத்தில் வீழ்ந்த விக்கிரமாதித்தரும், இன்று வீங்கிய விழியுடன் விளங்குகின்றனர். ஆச்சாரியார்மீது என் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்குக்காரணம் காட்டும்படி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, தாக்கீது பிறப்பித்து விட்டதாம்!!

இவ்வளவு அலங்கோல மானதாக இருக்கிறது நவீன விக்கிரமாதித்த நாடகம்! நாட்டினரே, இதைக் கேட்டிடுமின்! நகைப்புக்கிடமான அந்தக்கூட்டத்தை விட்டு நீங்குமின்! தமிழராகுமின்!

---

உ

"கந்த விலாஸ்"

அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்.,

ஜவுளி வியாபாரம், ஆடிசன்பேட்டை. காஞ்சிபுரம்.

கிளை ஆபீஸ்கள்:—

கடைவீதி
சேலம் டவுன்.



சுவாமி தேருக்கு எதிரில்
கீழரதவீதி
திருநெல்வேலி.

காஞ்சீபுரம், சேலம், எங்கள் சொந்தக் கைத்தறியில் நவீன நாகரிகத்திற்கேற்றவாறு தயாரிக்கப்பட்ட பட்டு & ஜவுளி சேலைகளும், பட்டு & நூல் ஜரிகை துணிகளும், பனாரஸ், கராச்சி, கொள்ளேகாலம், பெங்களூர், மதுரை, கோயமுத்தூர், புல்லம்பேட்டை, புதட்டூர் முதலிய ஊர்களில் தயாராகும் சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், மில்லில் தயாரிக்கப்பட்ட கோட்டிங், ஷர்ட்டிங், சீட்டி, வாயில் துணி முதலான எல்லாவித ஜவுளிகளும் விலை சகாயமாயும், சரக்கு நயமாயும், சாயம் உத்திரவாதமாயும் எங்களிடம் கிடைக்கும். ஒரு முறை வாங்கி உடுத்தி பார்க்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கந்தவிலாஸ் :: A. K. & SONS.,

துட்டிக்கதை

# சோதிட பரீட்சை

(தாசரதி)

தியாகராசனும் வேணுவும் பச்சையப்பன் கல்லூரிச் சிநேகிதர்கள். வெகுநாள் பழக்கமில்லாவிட்டாலும் இருவரும் மிகுந்த நட்புக்கொண்டிருந்தனர். வகுப்பில் இருவரும் சேர்ந்து வாசித்து வந்தனர். அதிகம் வளர்த்துவானேன்! இருவரும் மனமொத்த நண்பர்களாயிருந்தார்கள்.

ஆனால் ஒரு விஷயத்தில் மாத்திரம் தியாகுவிற்கும், வேணுவுக்கும் அபிப்பிராய பேதமிருந்தது. நாரதபுரம் நவீன சோதிட சாஸ்திரிகள் பேரில் வேணு அபார அபிமானம் கொண்டிருந்தான். ஆனால் சோதிடத்தின்மேல் நம்பிக்கையற்றிருந்த தியாகுவுக்கு வேணுவின் வார்த்தைகள் வேப்பங்காயாயிருந்தன. அடிக்கடி இவ்விருவருக்குள் தர்க்கம் நடக்கும்.

"வார்த்தை வலுத்தால் சண்டையில் முடியும்" என்றறிந்திருந்த தியாகராசன் இறுதியில் சோதிட சாஸ்திரியாரையே பரீட்சிக்க நினைத்தான். அன்றைய தினசரியில் கண்ட விளம்பரம் அவன் கண்ணைப் பறித்தது:—

"நாரதபுரம்"

**நவீன சோதிட சாஸ்திரியார்**

எதிர்கால கேள்வி நான்கிற்கு அணா எட்டு.

"எழுதும் நேரத்தையாவது எந்தப்பூவின் பெயரையாவது குறிக்கவும்."

இதைக்கண்ட தியாகு எடுத்தான் காகிதத்தை, எழுதினான் பின் வருமாறு:—

ஐயா, கீழ்க்கண்ட கேள்விகளுக்குத் தயவு செய்து விடைகளைத் தெரிவிக்கவும்.

1. என் தாயார் உடம்பு சீக்கிரம் குணமாகுமா?
2. என் நண்பர் வேணுவுக்கும் அவர் மனைவிக்கும் எப்பொழுது ஒற்றுமை ஏற்படும்?
3. அவருக்குப் பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா?

புஷ்பம்:— கனகாம்பரம்.

தங்களன்புள்ள,
தியாகராசன்.

இதை உடனே தபாலில் சேர்த்து விட்டான். அவசரத்தில் ஸ்டாம்பு ஒட்ட மறந்துவிட்டதால் சாஸ்திரியார் இரண்டணா அதிகம் கொடுக்க வேண்டியதாயிற்று. தியாகு தன் நண்பன் விலாசத்தையே எழுதியிருந்தான்.

ஒரு வாரம் கழிந்தது. வேணுவுக்கு சாஸ்திரியாரிடமிருந்து வந்த கடிதத்தில் கண்டிருந்ததாவது:—

"உங்கள் தாயாரின் உடம்பு இன்னும் ஒருவாரத்தில் குணமாகும். தங்கள் நண்பருக்கு ஆண்குழந்தை பிறக்கும். அது பிறந்தவுடன் அவர் குடும்பத்தில் அமைதியேற்படும்."

வேணு ஒன்றும் புரியாமல் விழித்தான். அருகிலிருந்த தியாகு வயிறுவெடிக்கச் சிரிக்காமலிருக்க முடியுமா? தியாகுவின் தாயார் இறந்து அநேக வருடங்களாயின. வேணுவின் துரதிர்ஷ்டமோ, சாஸ்திரியாரின் துரதிர்ஷ்டமோ வேணுவுக்கு இன்னும் விவாகமாக வில்லை!


## ஏஜண்டுகள் தேவை,

கீழ்க்கண்ட இடங்களில் நமது பட்டுகளுக்கு ஏஜென்ஸியை எடுத்து நடத்தத்திறமையுள்ள ஜில்லா ஏஜெண்டுகள் தேவை. ஜில்லா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, சாம்பிள் காட்டி, ஆர்டர் புக்செய்யவேண்டும்.

வாக்கு சாதுர்யமாக பேசுவோரும், நல்ல உழைப்பாளியாயுள்ளோரும், மாதம் ரூ. 150- முதல் ரூ. 500 வரை கண்டிப்பாக சம்பாதிக்கலாம். தகுந்த டிபாசிட் கட்டக்கூடியவர்கள் எழுதவும்.

**ஜில்லாக்கள்.**

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி. | 7. வடஆற்காடு |
| 2. மதுரை | 8 செங்கற்பட்டு |
| 3. திருச்சிராப்பள்ளி | 9. கோயம்புத்தூர் |
| 4. தஞ்சாவூர் | 10 நீலகிரி |
| 5. இராமநாதபுரம் | 11. சேலம் |
| 6. தென்னாற்காடு | 12. சித்தூர். |

**கே. எஸ். முத்தையா கம்பெனி,**

சில்க் அவுஸ் காசி. (ஸ்தாபித்தது 1909.)



## வானம்பாடி புதிய வெளியீடு!

குமஸ்தாவின் பெண்தான்
அல்லது
கொலைகாரியின் குறிப்புகள்.

என்ற தொடர்கதை சென்ற இதழோடு முடிவுற்றது.

பல உருசிகரமான சம்பவங்களையும், கருத்துக்களையும்கொண்ட மேற்படி கதையை, விரைவில், புத்தகவடிவில் தமிழர்களுக்குத்தர ஏற்பாடு செய்து வருகிறோம்.

ஏஜண்டுகளும், தோழர்களும், தங்களுக்கு எவ்வளவு 'காபிகள்' தேவை என்பதைத் தெரிவித்தல் நலம். ஆர்டருக்கு ஏற்றஅளவே அச்சிட உத்தேசிக்கிறோம்.

புத்தகம் கிரவுன் சைசில், அழகிய முகப்புடன், 50 பக்கங்கள் கொண்டதாக இருக்கும்.

விலை ஐந்தணா.


Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M A at 51, Nimanthakara Street, L Conjeeveram.